MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS SELECTION TO SCHOOL AND AWARD OF BURSARIES

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2022

01

நேரம் : 1 மணித்தியாலங்கள்

பெயர்: .....

புலமைத் தேடல்

பகுதி - I


● **1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்ததான உருவைத் தெரிவு செய்க**

01.



1) 2) 3)

02.



1) 2) 3)

● **கீழே தரப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப 3, 4 ஆகிய வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

03. ☺♘↗⌘, ↗⌘♘☺, ♘☺↗⌘, ...

1) ⌘↗☺♘ 2) ☺♘↗⌘ 3) ⌘↗♘☺

04. 72, 81, 91, 102, ...

1) 120 2) 114 3) 112

05. இன்று ஞாயிற்றுக்கிழமை, சென்ற சனிக்கிழமைக்கும் வரப்போகும் ஞாயிற்றுக்கிழமைக்கும் இடைப்பட்ட நாட்கள் எத்தனை?

1) 9 2) 8 3) 7

06. ஒரு வரிசையில் மாறனுக்கு முன்னால் 9 பேரும் சரவணனுக்குப் பின்னால் 9 பேரும் நின்றனர். மாறனுக்குப் பின்னால் சரவணன் நிற்கும் இவ்வரிசையில் மொத்தம் 32 பேர் நின்றனர் எனின் மாறனுக்கும் சரவணனுக்கும் இடையில் எத்தனை பேர் நின்றனர்?


1)12 2) 14 3) 18


07. காவேரி பிறக்கும் போது அவளுடைய தாயின் வயது 26 ஆகும். காவேரியின் தங்கை பிறக்கும் போது தாயின் வயது 31 ஆகும். காவேரியின் தங்கையின் தற்போதைய வயது 7 எனின் இன்னும் இரண்டு ஆண்டுகளின் பின்னர் காவேரியின் வயது யாது?

1) 12 2) 14 3) 15

● **8, 9 ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புக்களில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

08.





1) 2) 3)

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு

புலமைவளரி

இலக்கை நோக்கி


Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

09.










1) 2) 3)

● உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிறமை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனை கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக்கொண்டு 10ஆம், 11 ஆம் ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




10) கோடுகள் வழியே வெட்டும் போது எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்?

1) 60 2) 45 3) 30


11) ஒரு பக்கத்தில் மாத்திரம் நிறமை பூசப்பட்ட எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்?

1) 14 2) 10 3) 18

12. கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரேயளவான 6 கம்பித்துண்டுகளைப் பயன்படுத்தி செய்யக்கூடிய உரு பின்வருவனவற்றில் யாது?




1)



2)



3)



13. நீங்கள் இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 2021 ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம் என்பதைத் தெரிவு செய்க.

1) இருபதாம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்

2) இருபத்தோராம் நூற்றாண்டு மூன்றாம் தசாப்தம்

3) இருபத்தோராம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தம்

14. மிருகக்காட்சிச்சாலை ஒன்றில் காணப்பட்ட மான்கள், புலிகள், யானைகள், கரடிகள் என்பவற்றின் எண்ணிக்கை சமனாகும். அங்கு காணப்பட்ட சிங்கங்களின் எண்ணிக்கை யானைகளின் எண்ணிக்கையின் இருமடங்காகும் எனில் இத்தகவல்களை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1)

சிங்கம்	புலி	கரடி
யானை		மான்

2)

யானை	மான்	புலி
கரடி	சிங்கம்	


3)

சிங்கம்	புலி	கரடி
யானை		மான்


15. 2021 ஆம் ஆண்டு தை மாதத்தில் ஐந்து சனிக்கிழமைகளும் ஐந்து திங்கட்கிழமைகளும் காணப்பட்டதாயின் அம்மாதத்தில் காணப்பட்ட ஞாயிற்றுக்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?

1) 75 2) 85 3) 80


16. தரப்பட்ட கோலத்திற்கமைவாக அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




1)



2)



3)



17. வாமணன், மாறனின் மகன் ஆவான். நிதினின் தந்தை வாமணன் ஆவான். இவர்களில் தந்தையாகவும் மகனாகவும் உள்ளவர்

1) வாமணன் 2) மாறன் 3) நிதின்


18. ஐந்து வினாக்கள் கேட்கப்பட்ட ஒரு வினாவிடைப் போட்டியில் முதலாம் வினாவிற்கு 10 புள்ளிகளும் இரண்டாம் வினாவிற்கு 8 புள்ளிகளும் மூன்றாம் வினாவிற்கு 6 புள்ளிகளும் நான்காம் வினாவிற்கு 4 புள்ளிகளும் ஐந்தாம் வினாவிற்கு 2 புள்ளிகளும் வழங்கப்பட்டன. மாணவன் ஒருவன் 24 புள்ளிகளைப் பெற்றான் எனின் அவன் சரியாக விடையளிக்காத வினா எது?

1) மூன்றாவது வினா 2) நான்காவது வினா 3) ஐந்தாவது வினா

www.ikeou.lk


19, 20 ஆகிய வினாக்களில் கோல ஒழுங்கிற்கேற்ப ? அடையாளமிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

19.



1) 12 2) 6 3) 9

20.



1) 11 2) 12 3) 13

21. தொலைக்காட்சி என்பது இலக்கங்களைப் பயன்படுத்தி 123456 என எழுதப்பட்டால் தொலைபேசி என்பது எவ்வாறு எழுதப்படலாம்?

1) 1246 2) 1256 3) 1276

22. பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரு உருக்களும் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.




1) E, Ɔ 2) Ǝ, C 3) C, E

23. இன்று ஊவா மாகாணத்தில் அதிக மழை பெய்யலாமெனவும் வடமேல் மாகாணத்தில் அதிக வெப்பம் காணப்படலாம் எனவும் வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி அதிக வெப்பம், அதிக மழை காணப்படலாமென அறிவிக்கப்பட்டுள்ள இரு நகரங்கள் முறையே.


1) யாழ்ப்பாணம், பதுளை 2) புத்தளம், மொனராகலை 3) குருநாகல், கேகாலை

24. மெலிபன் பால்மா பெட்டியொன்றில் காணப்பட்ட சுட்டுத்துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. **சுட்டுத்துண்டில் X, Y ஆகியனவாக அமைவன முறையே,**



1) காலாவதியாகும் திகதியும் உற்பத்தித் திகதியும்
2) உற்பத்தித் திகதியும் சந்தைக்கு விடப்பட்ட திகதியும்
3) உற்பத்தித் திகதியும் காலாவதியாகும் திகதியும்

25. உருவில் காணப்படும் முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?



1) 8 2) 7

3) 6

26. குறியீடு @ இரு தடவைகளும் குறியீடு ¶ ஒரு தடவையும் பயன்படத்தப்பட்டு 220 எழுதப்பட்டிருந்தது. 220 உடன் இரண்டாயிரத்தைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணைக் காட்டும் விடை யாது?

1) @¶¶@ 2) @@@¶ 3) ¶¶¶@

27. மாலா அமலியிலும் உயரம் கூடியவள். மேகலா மாலாவிலும் உயரம் குறைந்தவள். இதற்கேற்ப தீர்மானிக்க முடியாத கூற்றாக அமைவது.

1) மூவரிலும் உயரம் கூடியவள் மாலா
2) அமலி, மேகலா ஆகிய இருவரிலும் உயரம் கூடியவர் யாரெனக் கூறுவது கடினம்
3) மேகலாவிலும் அமலி உயரம் கூடியவள்.


28. மொத்த வியாபார நிலையமொன்றுக்கு மூன்று லொறிகளில் வந்து சேர்ந்த அரிசி மூட்டைகளின் மொத்த எண்ணிக்கை 165 ஆகும். இந்த அரிசி மூட்டைகள் அனைத்தும் 15 சில்லறைக்கடைகளுக்கு சம எண்ணிக்கையில் அனுப்பி வைக்கப்பட்டால் ஒரு சில்லறைக் கடைக்கு அனுப்பிவைக்கப்பட்ட அரிசி மூட்டைகளின் எண்ணிக்கை யாது?


1) 11 2) 15 3) 13


29. MAMA என்ற சொல் எழுதப்பட்ட அட்டையை முகம் பார்க்கும் கண்ணாடி முன் பிடித்தால் அது தோன்றும் விதத்தைத் தெரிவு செய்க.


1) AMAM 2) MAMA 3) WAWA

30. கீழேயுள்ள கயிற்றுத்துண்டு புள்ளிக்கோடு வழியாக வெட்டப்பட்டால் கிடைக்கப்பெறும் துண்டுகள் எவை?



1) 

2) 

3) 

www.ikedu.lk

31. சதுர வடிவான மரக்கறித் தோட்டம் ஒன்றின் ஒருபக்க நீளம் 20 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 4 மீற்றர் இடைவெளியில் தூண்கள் நடப்பட்டன. அவ்வாறு நடப்பட்ட தூண்கள் எத்தனை?

1) 12 2) 16 3) 20

32. காரியாலயம் ஒன்றில் வேலை செய்யும் பூமிகா வேலை நாட்களில் முற்பகல் 8.30 மணிக்கு வேலைக்கு வந்து பிற்பகல் 4.15 மணிக்கு வேலையை முடித்துக் கொள்வார். அதற்கிடையில் பகல் உணவிற்காக 30 நிமிடங்களும் தேநீர் இடைவேளைக்காக 15 நிமிட இடைவேளைகள் இரண்டும் கிடைக்கும் எனின் பூமிகா காரியாலயத்தில் வேலை செய்யும் நேரம் எவ்வளவு?

1) 7மணித்தியாலம் 2) 6மணித்தியாலம் 45நிமிடம் 3) 7மணித்தியாலம் 15நிமிடம்

33. வியாபாரி ஒருவர் பற்பசைப்பெட்டி ஒன்றினை ரூபா 128.00 இற்கு வாங்கி ரூபா 145.00 இற்கு விற்பனை செய்வதால் ரூபா 255.00 இனை இலாபமாகப் பெறுகின்றார். வியாபாரி விற்பனை செய்த சவர்க்காரங்களின் எண்ணிக்கை யாது?


1) 25 2) 15 3) 35

34. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

111 ☐ 4 = 111 ☐ 333

1) +, - 2) +, x 3) x , +

35.



முகங்களில் எண்கள் குறிக்கப்பட்ட சதுரமுகி ஒன்றின் விரிக்கப்பட்ட நிலையை உரு காட்டுகின்றது. இச்சதுரமுகியின் எதிர்முகங்களுக்கிடையே ஒரு தொடர்பு காணப்படுகின்றது. அத்தொடர்புக்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமற்ற எண்ணைத் தெரிவு செய்க.

1) 3 2) 18 3) 27

36. உமா, ரமா, பாமா ஆகிய மூன்று நண்பிகளினதும் தம்பிகள் மூவரும் ஆரூரன், தீசன், யாதவ் ஆவர். தீசனும் பாமாவின் தம்பியும் சகபாடிகள். தீசன் உமாவின் தம்பி அல்ல எனின் ரமாவின் தம்பி யார்?

1) ஆருரன் 2) தீசன் 3) யாதவ்

37. 9, 6 என்னும் இரு எண்களினாலும் மீதியின்றி வகுபடக்கூடியனவும் 15 இற்கும் 95 இற்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண்ணிக்கை யாது?

1)5 2) 4 3) 3

38.நாதனிடமிருந்த பணத்தொகையை விட அவனது தம்பியிடம் 75ரூபா குறைவாக இருந்தது. நாதன் 30ரூபாவை தனது தம்பிக்குக் கொடுத்தால் நாதனது தம்பியிடமுள்ள பணத்தொகை நாதனிடமுள்ள பணத்தொகையிலும்,

1) இருபத்தைந்து ரூபாவினால் குறைந்தது. 2) பதினைந்து ரூபாவினால் குறைந்தது.

3)பதினைந்து ரூபாவினால் கூடியது.

- **A, B, C ஆகிய மூன்று மாமரங்களிலிருந்து பின்வரும் அடிப்படையில் மாம்பழங்கள் பறிக்கப்பட்டன. அத்தகவல்களைக் கொண்டு 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

மரம் A இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு மாம்பழங்கள் மரம் C இல் பறிக்கப்பட்டது.

மரங்கள் A, B ஆகியவற்றில் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை மரம் C இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கைக்குச் சமனாகும்.

மரம் C இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களில் 8 மாம்பழங்களை காவற்காரருக்கு வழங்கிய பின்னர் அதில் 40 மாம்பழங்கள் மீதியாகக் காணப்பட்டன.

39. மரம் A இல் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

1)12 2) 24 3) 16

40. மூன்று மரங்களிலும் பறிக்கப்பட்ட மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 96 2) 72 3) 80

www.ikeal.lk